**பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு**

**பிரதேச அபிவிருத்தி உதவி செயயற்திட்டம் LDSP) இற்காக செயற்திட்ட பணியாளர் சபைக்கு நியமித்தல்.**

## 01. பிரதேச அபிவிருத்தி செயற்திட்டம் ; (LDSP)

பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டம் (LDSP) உலக வங்கியின் (WB) கடன் உதவி, ஐரோப்பிய சங்கத்தின் வழங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதியுதவி மூலம் உதவு தொகை வழங்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் நோக்கம் உள்ளூராட்சி மன்றங்களின் இயலுமைகளை பலப்படுத்தி உள்ளூராட்சி மன்ற சேவைகளை பொறுப்புடனும் வினைத்திறனுடம் மக்களுக்கு வழங்குதல், செயற்திட்ட அதிகாரப் பிரதேசத்தில் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல் மற்றும் பிரச்சினைகள் அல்லது சுகாதார திடீர் அனர்தங்களின் போது துரிதமாக மற்றும் பயன்மிக்கதாக அதனை எதிர்கொள்வதாகும். செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டு செலவினம் 100.84 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். செயற்திட்டத்தின் காலம் 2019.06.30 தொடக்கம் 2023.07.31 வரையாகும். இச் செயற்திட்டத்தின் மூலம் வடக்கு, கிழக்கு, வடமத்தி, மற்றும் ஊவா மாகாணங்களில் 134 உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கப்படுகின்றன.

செய்திட்டத்தின் இணைப்புப் பிரிவு (PCU) பொது நிருவாக, உள்நாட்டு அலுவல்கள். மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் (இலக்மக் 330, யுனியன் பிளேஸ், கொழும்பு 02) இல் தாபிக்கப்பட்டுள்ளதுடன் செயற்திட்டத்தினை அமுல்படுத்தும் (PIU) 04 அலகுகள் வடக்கு, கிழக்கு, வட மத்தி மற்றும் ஊவா மாகாணங்களில் தாபிக்கப்பட்டுள்ளன.

பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டம் (LDSP) செயற்திட்ட இணைப்பு பிரிவின் (PCU) கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களுக்காக அரச சேவையில் நிரந்தரப்படுத்தப்பட்ட இதற்கான தகமைகைளப் பூர்த்தி செய்துள்ள மற்றும் பொருத்தமான உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவி | பதிவிகளின் எண்ணிக்கை | சம்பள குறியீடு |
|---|---|---|---|
| 1 | உதவிப் பணிப்பாளர் (மேற்பார்வை மற்றும் மதிப்பீடுகள்) | 01 | PS 4 -A |
| 2 | உதவிப் பணிப்பாளர் (பெறுகை) | 01 | PS 4 -A |
| 3 | உதவிப் பணிப்பாளர் (நிதி முகாமைத்துவம்) | 01 | PS 4 - A |

**02.** மேற்கூறப்பட்ட பதவிகளுக்காகான தகமைகள் மற்றும் அனுபவங்கள்.

➢ கல்வித் தகமை மற்றும் அனுபவம்

I உரிய துறையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரிய துறையில் பட்டத்தினைப் பெற்று இருத்தல்.

அல்லது

உரிய துறையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரிய துறையில் பட்டத்திற்கு சமமான தகமை

அல்லது

உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட துறைசார் அங்கத்துவம் / சமமான தொழில்சார் தகமைகள் உரிய துறையில் பட்டத்தினைப் பெற்று இருத்தல்.

உடன்

குறைந்தபட்சம் உரிய துறையில் 08 வருடகால தகமை அனுபவம்

**II**. அரசாங்கத்தின் நாடு தழுவிய சேவைகளில் II/III வகுப்பின் உத்தியோத்தராக இருத்தல் அல்லது அதனை விட மேற்பட்ட அல்லது உரிய துறைக்கு சமமான தரத்தைக் கொண்டு இருத்தல்.

உடன்

II/III வகுப்பின் பதவியில் குறைந்தட்சம் 08 வருடகால சேவை அனுவத்தினைப் பெற்றிருத்தல்.

பொதுவான நிபந்தனைகள்

- இலங்கைப் பிரஜைகள் மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு தகமை பெற்றுள்ளனர்.
- வெளிநாட்டு செயற்திட்டங்களில் அனுபவங்கள் கொண்ட விண்ணப்பதாரர்கள் தொடர்பில் கூடுதலாக கவனம் செலுத்தப்படும்.
- **தேர்ந்தெடுக்கும் முறைகள்** - தகமைகள் மற்றும் அனுபவங்களுக்கு அமைய குறுகிய அளவு பட்டியல்படுத்தப்பட்ட விண்ணப்படிவங்கள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும்.
- **வயது** – விண்ணப்ப படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் தினமன்று 60 வயதினை விட குறைவாக இருக்க வேண்டும்.
- **தொழில் நிபந்தனை** – சகல நியமனங்களும் பதில் கடமை அடிப்படையில் வழங்கப்படுதுடன் அது தொடர்பான காலம் 2023.07.31 வரையாகும். அத்துடன் அவரின் நிரந்தரப் பதிவிகளில் சேவையில் ஈடுபட வேண்டும். செய்திட்டத்தின் காலத்தினை நீடித்தல், திருப்திகரமான செயற்சாதனைக்கு அமைய நியமனங்களின் சேவைக் காலம் நீடிக்கப்படும்.
- விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்படிவங்களை தாபனப் பொறுப்பாளர் ஊடாக சமர்பிக்க வேண்டும்.
- இது தொடர்பில் விருப்பம் காண்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது சுய விபர வெளிப்பாடுகள் **(CV)** உரிய கல்வித் தகமை மற்றும் அனுபவங்களுடனான பிரதிகளுடன் செயலாளர் பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி மன்ற அமைச்சு இலக்கம் 330, யுனியன் பிளேஸ், கொழும்பு

02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது **projects.recruitment@pclg.gov.lk** என்ற இணையத்தள முகவரிக்கு 2023 ஜனவரி மாதம் 30 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் அனுப்ப வேண்டும்.

- பதவிப் பெயர் மற்றும் செயற்திட்டத்தின் பெயரை கடித உரையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.
- தாங்கள் ஒரு பதவியினைவிட கூடுதலாக விண்ணப்பதாயின் அவ்வவ் பதிவிகளுக்காக தனித்தனியான விண்ணப்படிவங்களை சமர்பிக்கவும்.
- முறையாக பூர்த்தி செய்யப்பட்டாத விண்ணப்படிவங்கள், கல்வி மற்றும் தொழில் தகமைகளின் சான்றிதழ்களின் தகவல்கள் மற்றும் பொருத்தமற்ற விண்ணப்படிவங்கள் மற்றும் உரிய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்படிவங்கள் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

.

.

குறிப்பு: பதவிகளுக்கு உரிய தகமைகள், அனுபவம், மற்றும் சம்பளம் தொடர்பான தகவல்கள் மற்றும் ஏனைய மேலதிக தகவல்களுக்காக தயவு செய்து முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் இலக்கம் **01/2019** சுற்றரிக்கை மற்றும் அமைச்சின் இணையத்தளம் www.mpclg.gov.lk பார்க்கவும்

.

**செயலாளர்**

பொது நிருவாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு.

2023.01.20